ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

2423/34 - 2025 පෙබරවාරි මස 15 වැනි සෙනසුරාදා - 2025.02.15

*2423/34 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.-பி 15/2016*

MOD/DEF/HRM/01/AMD/REG

**(357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டம்**

(357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தின் 29 ஆம் மற்றும் 155 ஆம் பிரிவுகளின் கீழ் பாதுகாப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**அநுர குமார திசாநாயக்க,**
பாதுகாப்பு அமைச்சர்.

கொழும்பு,
*2025, சனவரி 12.*

**ஒழுங்கு விதிகள்**

1988 ஆம் ஆண்டு ஒற்றோபர் 21 ஆந் திகதிய 528/15 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1987 ஆம் ஆண்டின் இலங்கைத் தரைப்படைப் பெண்கள் சிறப்பணி ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன :-

(1) ஒழுங்குவிதி 22 இல் -

(அ) பந்தி (இ) இனை நீக்கிவிடுவதன்மூலமும்;

1A - G 43750 — 06 (2025/02)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஆ) அதன் பந்தி (ஈ) யினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுக:-

"(ஈ) எல்லா அரசாணை அமர்வு பெற்ற உத்தியோகத்தர்களும் ஐம்பத்தைந்து (55) வயதை அடைந்ததன் மேல் அல்லது இருபது ஆண்டுகள் (20) சேவைக் காலப்பகுதியொன்றை பூர்த்திசெய்வதன்மீது ஓய்வு பெறுதல் வேண்டும்."; அத்துடன்

(இ) பந்தி (உ) வில் "50 வயதை அடையும் வரையில்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "60 வயதை அடையும் வரையில்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்:

(2) ஒழுங்குவிதி 38 இன் பந்தி (இ) யினை நீக்கிவிடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) ஒழுங்குவிதி 50 இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் : -

"50. இவ்வொழுங்குவிதிகளில் அல்லது வேறு ஒழுங்குவிதிகளில் எது எவ்வாறிருப்பினும், ஒரு படைச்சேவைப் பெண் தரைப்படை முனைஞன் வேறு வகையில் பணித்தாலொழிய, நாற்பத்தைந்து (45) வயதை அடைவதன்மீது அல்லது இருபத்திரெண்டு (22) ஆண்டுகள் எனும் காலப்பகுதியொன்றுக்கு வேலை செய்திருப்பதன் மேல் இளைப்பாறுதல் வேண்டும்.".

EOG 02-0133

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.